2018 ஜூன் 29]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

249—

அதிநவீன சொகுசுப் பேருந்து

***33948—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர்-சென்னை வழித்தடத்தில் அதிநவீன சொகுசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 427 Ultra Deluxe, *சென்னை-மேட்டூருக்கு இயக்கப்பட்ட நிலையில் பயணிகளின் அடர்வு குறைவு மற்றும் வருவாய் இழப்பு ஏற்பட்டதால் மேற்படி தடத்தில் 2008 ஆம் ஆண்டு பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது. இருப்பினும், தற்போது சென்னை-மேட்டூர் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மூலமாக தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், மேட்டூர்-சென்னை வழித்தடத்தில்* Ultra Deluxe *சொகுசுப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய சூழல் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளின் எண்ணிக்கை குறைவு என்று சொல்வதை*

ஏற்றுக்கொள்ள முடியாது. இயக்கப்பட்டு வந்த அந்த Ultra Deluxe பேருந்து condemn ஆகி சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் நிறுத்தப்பட்டுவிட்டது. இப்போது சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் Ultra Deluxe பேருந்தே இல்லை. எனவே, முன்பு இந்தக் கேள்வியைக் கேட்ட சமயத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்தக் கோரிக்கையை வைத்தபோது, தருமபுரியிலிருந்து தருமபுரி-சென்னை செல்கிற பேருந்தை மேட்டூருக்கு நீட்டிப்பு செய்து, இப்போது அந்த வசதியை செய்து கொடுத்திருக்கிறார். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மேட்டூர் மக்கள் விரும்புவது என்னவென்றால், ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் சென்னைக்கு சென்று கொண்டிருந்த Ultra Deluxe பேருந்து மீண்டும் இயக்கப்பட வேண்டும் என்பதுதான். காரணம், அங்கே இரயில் போக்குவரத்து—இப்போது Passengers train நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே தனியார் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுவதால், முழுக்க முழுக்க அவர்களே monopoly ஆக இருந்துகொண்டு, அவர்கள் நிர்ணயிப்பதுதான் கட்டணம் என்கிற வகையில், அவர்கள் 500 ரூபாய்க்குமேல் ஒவ்வொரு பயணியிடமும் கட்டணம் வசூலிக்கின்றனர். அதிலும் season காலங்களில், 1,000/- ரூபாய்கூட வசூலிக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக ஒரு Ultra Deluxe பேருந்தை இயக்கினால், ஓர் ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டு, அங்குள்ள பயணிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் நல்ல பேருந்து சேவை கிடைக்கும்.

எனவே, நாங்கள் கேட்க விரும்புவது, புதிய பேருந்துகூட அல்ல, ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருந்த அந்த Ultra Deluxe பேருந்தை மீண்டும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயக்க வேண்டும் என்பதுதான். அதுதான் எங்களுடைய கோரிக்கை. இதன் அவசியம், தேவை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து, அவருடைய அனுமதியைப் பெற்று, மீண்டும் அந்த வழித்தடத்தில் பேருந்தை இயக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த மேட்டூர் வழித்தடத்தில் 4 சாதாரண பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்தப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு 65% மட்டும்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த* Ultra Deluxe *பேருந்தின் இயக்கம் நிறுத்தப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு* Ultra Deluxe *பேருந்தை இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பேருந்து பணிமனை தற்போது 97 பேருந்துகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இட நெருக்கடியின் காரணமாக, இலாபகரமாக இயங்கக்கூடிய வழித்தடங்கள் நிறைய இருந்தும், அந்த வழித்தடங்களில் அந்தப் பணிமனையிலிருந்து பேருந்துகளை புதிதாக இயக்க முடியவில்லை. அதற்குக் காரணம் இட நெருக்கடிதான். எனவே, சேலம் அரசுப் போக்குவரத்துத் கழகத்தினுடைய அதிகாரிகளே வந்து மேச்சேரி பகுதியை பார்வையிட்டு, மேச்சேரியில் ஒரு பணிமனை அமைப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது என்றும், அந்த இடத்தை ஒரு* ideal place *என்று அவர்கள் நிர்ணயித்து, இடம் கொடுத்தால், நாங்கள் அங்கே பணிமனையை ஆரம்பிக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அங்கு 3 ஏக்கர் நிலத்தை பொதுமக்கள் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒப்படைப்பதற்கு, நிலமாற்றம் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். மேட்டூர் பணிமனையில் 97 பேருந்துகள் இருக்கிற காரணத்தால், இட நெருக்கடி ஏற்படுகிறது. இனிமேல், அந்தப் பணிமனையை விரிவாக்கம் செய்யவும் முடியாது. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தினரே மேச்சேரியில் பணிமனை அமைக்கத் தயாராக இருக்கிறார்கள், பொதுமக்களும் இடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்த இடத்தினுடைய முக்கியத்துவம் தெரியும். எனவே, இதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன்*

கலந்து, அவருடைய அனுமதியைப் பெற்று, மேச்சேரியில் ஒரு பணிமனையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 97 பேருந்துகளைக் கொண்டு அந்தப் பணிமனை இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மேலும், அங்கே இட நெருக்கடி இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். போக்குவரத்துத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அருகிலுள்ள பணிமனைகளிலிருந்து எத்தனை பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதையும் கணக்கிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மேச்சேரியில் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

250—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***2072—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின் மூலமாக திருச்செந்தூர் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?